**OS. No. 9 /2021**

P.W.1 - முத்து கிருஷ்ணன்

தேதி: 11.03.2024

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.**

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது சொத்தை அபகரித்ததால் அதை 1ம் பிரதிவாதியிடம் இருந்து மீட்டு தரவேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து முகுந்தராயபுரத்தில் உள்ளது. தாவா சொத்தை 05.03.1997ம் தேதி ஆற்காடு ஜெயந்தி லால் என்பவரிடமிருந்து நான் கிரையம் பெற்றேன். நான் அந்த சொத்தை கிரையம் வாங்கிய போது ரூ.4,50,000/–த்திற்கு கிரையம் பெற்றேன். என்னிடம் காட்டப்படுவது நான் ஆற்காடு ஜெயந்தி லால் என்பவரிடமிருந்து கிரையம் பெற்ற கிரைய ஆவணம் ஆகும். அந்த ஆவணம் **பி.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் 12.01.2019ம் தேதி 1ம் பிரதிவாதியிடம் பணம் கேட்டு அணுகினேன். 1ம் பிரதிவாதி ரூ.4,00,000/–த்தை 12.01.2019ம் தேதி அவருடைய வங்கி கணக்குள்ள விஜயா வங்கியிலிருந்து என்னுடைய வங்கி கணக்குள்ள பெடரல் வங்கிக்கு பணம் அனுப்பி வைத்தார். நான் பணக்கஷ்டத்தின் காரணமாக தொழிலை நடத்துவதற்கு மேற்படி கடனை பெற்றேன். என்னுடைய தொழிற்சாலையின் பேரில் OD அக்கவுண்டில் வங்கியிலிருந்து கடன் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. நான் எந்த தனியார் நிதி நிறுவனத்திலிருந்து என்னுடைய தொழிற்சாலையின் பேரில் கடன் வாங்கவில்லை. என்னுடைய மனைவி பெயரில் வீட்டு கடன் சுந்தரம் பைனான்சில் உள்ளது. அந்த கடனை கட்டிக்கொண்டு வருகிறோம். என்னுடைய OD அக்கவுண்டில் என்னுடைய தொழிற்சாலையின் பேரில் கடன் பெறலாம் என்றால் சரிதான். ஆனால் நான் கடன் எதுவும் பெறவில்லை. நான் மேற்படி OD அக்கவுண்டில் 1ம் பிரதிவாதியை அணுகாமல் வங்கியிலிருந்து கடன் பெற்றிருக்கலாம் என்றால் சரிதான். நான் 1ம் பிரதிவாதியிடம் கடன்

வாங்கிய 12.01.2019 ம் தேதியில் ஆவணங்கள் எதுவும் கொடுக்கவில்லை. நான் 1ம் பிரதிவாதியிடம் மேற்படி தேதியில் 4 வெற்று பச்சை தாள்களிலும் மற்றும் வெற்று காசோலையில் கையொப்பங்கள் போட்டு கொடுத்தேன். நான் அந்த விவரத்தை என்னுடைய பிராதிலோ அல்லது நிரூபண வாக்குமூலத்திலோ குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் தற்போது மேற்படி தேதியில் 4 வெற்று பச்சை தாள்களிலும் மற்றும் வெற்று காசோலையில் கையொப்பங்கள் போட்டு கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 12.01.2019 ம் தேதியில் 1ம் பிரதிவாதியிடம் வேறு எந்த ஆவணமும் என்னிடம் கொடுக்கும்படி கேட்கவில்லை. நான் மீண்டும் 1ம் பிரதிவாதியிடம் 18.01.2019 ம் தேதி ரூ.4,00,000/- கடன் பெற்றேன். 1ம் பிரதிவாதி அவருடைய மருமகன் சரவண குமார் வங்கி கணக்கிலிருந்து என்னுடைய வங்கி கணக்கிற்கு ரூ.3/- வட்டி வீதம் பிடித்தம் செய்து ரூ.3,86,000/-த்தை அனுப்பி வைத்தார். மீதி பணம் ரூ.2,000/-த்தை பத்திர செலவிற்கு பிடித்துக்கொண்டார். மேற்படி பணத்தை 3 மாதத்தில் திருப்பி கொடுக்கவேண்டும் என்பதற்காக 1ம் பிரதிவாதி ஒரு மாதத்திற்கு வட்டி பிடித்தார். நான் அன்றைய தேதியில் 1ம் பிரதிவாதியிடம் எந்த ஆவணமும் ஒப்படைக்கவில்லை. மேற்படி வட்டி நான் அசல் தொகையை ஒரு மாதத்தில் திருப்பி கொடுக்கவேண்டும் என்பதற்காக பிடிக்கப்பட்டது. ஆனால் என்னால் அந்த பணத்தை ஒரு மாதத்திற்குள் திருப்பி கொடுக்க முடியவில்லை. நான் 1ம் பிரதிவாதி என்னுடைய ஓட்டல் வாசலில் வந்து தகராறு செய்தபின்பு 12.02.2019 ம் தேதி பி.சா.ஆ.1 ஆவணத்தை 1ம் பிரதிவாதியிடம் ஒப்படைத்தேன். 1ம் பிரதிவாதியிடம் நான் முதல் தடவை மற்றும் 2ம் தடவை மேற்படி தொகைகளை கடனாக பெற்ற போது அவர் என்னை சொத்து பத்திரங்களை ஒப்படைக்கவேண்டும் என்று நிர்பந்திக்கவில்லை. மேற்படி 1ம் பிரதிவாதி தகராறு செய்ததால் 1ம பிரதிவாதியிடம் 12.02.2019 ம் தேதி ஆவணத்தை ஒப்படைத்த விவரத்தை என்னுடைய நிரூபண வாக்குமூலம் மற்றும் பிராதில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி வந்து தகராறு செய்யும் போது என்னிடம் சம்பளம் வாங்கும் ஊழியர்கள் அங்கு இருந்தார்கள். அந்த ஓட்டல்

2016 ல் திறந்தேன். 2016 லிருந்தே கேமரா உள்ளது. அதற்குண்டான பதிவுகள் உள்ளது. அதைப்பார்த்தால் 1ம் பிரதிவாதி தகராறு செய்த விவரங்கள் தெரியவரும் என்றால் சரிதான். நான் பி.சா.ஆ.1 ஆவணத்தை 1ம் பிரதிவாதியிடம் 2020ம் வருடத்தில் 6 மாதம் கழித்து ஒப்படைத்தேன். நான் மேற்படி ஆவணத்தை ஒப்படைப்பதற்கு முன்பு வங்கி மூலம் 1ம் பிரதிவாதிக்கு 4 அல்லது 5 மாதங்கள் வட்டி செலுத்திவந்தேன். அந்த பணம் என்னுடைய தனிப்பட்ட வங்கி கணக்கு மூலம் செலுத்தினேன். அதன்பிறகு என்னுடைய அலுவலகத்திற்கு வந்து 1ம் பிரதிவாதி தகராறு செய்தார். நான் பி.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சொத்து விவரங்கள் படி பிராதில் குறிப்பிடவில்லை. நான் 2ம் பிரதிவாதி பெயரில் சார்பதிவளார் அலுவலகம் சென்று கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொடுத்தேன். அந்த ஆவணம் என்னிடம் காட்டப்படுவது தான். அந்த ஆவணம் **பி.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி பி.சா.ஆ.2 ஆவணத்தின் பேரில் ரூ.10,00,000/-த்திற்கு சொத்தை விற்பதாக கூறி ரூ.1,00,000/- முன்தொகையாக பெற்றுக்கொண்டதாக குறிப்பிட்டு கிரைய ஒப்பந்தம் போட்டுக்கொடுத்தேன். அந்த கிரைய ஒப்பந்தத்தை நான் 21.05.2020 தேதியில் ரத்து செய்துவிட்டேன். அந்த ஆவணம் என்னிடம் காட்டப்படுவது தான். அந்த ஆவணம் **பி.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் பைசல் ரசீதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த ஆவணம் **பி.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட பொது அதிகார ஆவணத்தின் அசல் என்னிடம் காட்டப்படுவது தான். அந்த ஆவணம் **பி.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் கொடுத்த பவரின் அடிப்படையில் 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த அசல் கிரைய பத்திரம் என்னிடம் காட்டப்படுவது தான். அது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் அசல் பட்டா 12.02.2019ம் தேதி நான் பத்திரத்தை 1ம் பிரதிவாதியிடம் கொடுக்கும் போது கொடுக்கப்பட்டதாகும். அந்த பட்டா **பி.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் பெயரில் கிரையபத்திரம்

ஏற்படுத்திய விவரம் 2021ம் வருடம் 5வது மாதத்தில் தெரியவந்தது. நான் முதலில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அதன் பிறகு 1ம் பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தேன். நான் காவல் நிலையத்தில் 1ம் பிரதிவாதி என்னை ஏமாற்றி என் சொத்தை அபகரித்ததாக புகார் கொடுத்துள்ளேன். அவ்வாறு என் சொத்தை அபகரித்ததாக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளேன்.

**1ம் பிரதிவாதி தரப்பில் வா.சா.1 பகுதியாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பு அறிவார்ந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

S JOHN SUNDARLAL SURESH

Digitally signed by S JOHN SUNDARLAL SURESH